4514

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

ගෘහ ආර්ථික විද්‍යාව I
மனைப் பொருளியல் I
Home Economics I

28 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** ‘தற்காலத்தில் இரண்டுமாடிக் கட்டடங்களுக்குப் பதிலாக பல மாடிகளைக் கொண்ட கட்டடங்களைக் காணலாம்.’ இது புதிய வடிவமைப்பில் எப் பயன்பாட்டுக் காரணி ஆகும்?
(1) பொருந்தியமைவு
(2) கலைத்துவம்
(3) காலம், இடைவெளி மற்றும் நியமங்களுடன் பொருந்தியமைதல்
(4) பெறுமானத் தொகுதி
(5) விகிதசமம்

**2.** கோடுகளையும் அக்கோடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் உணர்வுகளையும் சரியாகக் காட்டும் விடை எது?
(1) சரிவுக் கோடுகள் - பரபரப்பு, வலிமை
(2) நிலைக்குத்துக் கோடுகள் - உயரம், உறுதி
(3) வளைநெளி கோடுகள் - அசைவுகள், மகிழ்ச்சி
(4) வளை கோடுகள் - நெகிழ்வுடையது, சாந்தம்
(5) கிடைக் கோடுகள் - விரிவு, அழகு

**3.** கட்டடங்களை நிர்மாணிக்கும்போது காபன் பாதச் சுவடுகளைக் குறைப்பது சம்பந்தமான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - தூரப் பிரதேசங்களிலிருந்து தரமான மூலப்பொருட்களைப் போக்குவரத்துச் செய்தல்
B - நவீனத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் புதிய மாதிரிகளைப் பயன்படுத்துதல்
C - வடிவமைப்பின்போது மீளப் புதுப்பிக்கத்தக்க வளங்களைப் பயன்படுத்துதல்
D - நிர்மாணத்தின்போது நிலக்கரி, சீமெந்து போன்ற பொருட்களைப் பயன்படுத்துதல்.
இவற்றில் சரியானது / சரியானவை
(1) A மாத்திரம். (2) C மாத்திரம். (3) A, B ஆகியன மாத்திரம்.
(4) B, D ஆகியன மாத்திரம். (5) C, D ஆகியன மாத்திரம்.

**4.** தாவரவியல் பூங்காவொன்றை அலங்கரிக்கும்போது இயற்கைச் சூழலின் இடவசதிக்கும் துணைக்கூறுகள், தாவரங்கள் என்பவற்றுக்கும் புதிய வடிவத்தை வழங்குவதனூடாக அலங்கரிக்கப்படுகின்றது. இக்கூற்று பொருத்தமாவது
(1) வன் நிலத்தோற்ற வடிவமைப்பிற்காகும்.
(2) வடிவ வடிவமைப்பிற்காகும்.
(3) பசுமை எண்ணக்கருவிற்காகும்.
(4) மென் நிலத்தோற்ற வடிவமைப்பிற்காகும்.
(5) சஞ்சரித்தல் தகவிற்காகும்.

[பக். 2 ஐப் பார்க்க

**5.** மனிதனுள் சக்தியைச் சேமிக்கும் பல்சக்கரைட்டு
(1) அமைலோசு (2) அமைலோ பெத்தின் (3) செலுலோசு
(4) மாப்பொருள் (5) கிளைக்கோசன்

**6.** பின்வருவனவற்றுள் புரதத்தில் கட்டாயமாக அடங்கவேண்டிய இரண்டு மூலகங்களைக் கொண்ட விடை எது?
(1) காபன், நைதரசன் (2) காபன், கந்தகம் (3) ஐதரசன், இரும்பு
(4) ஒட்சிசன், இரும்பு (5) நைதரசன், கந்தகம்

**7.** ஒருவேளை உணவின்போது கிடைக்கப்பெற்ற மொத்த சக்தியின் அளவு 800 கிலோ கலோரி ஆகும். அதில் புரதம் 50 கிராமும், கொழுப்பு 20 கிராமும் அடங்கும். இவ்வுணவு வேளையில் அடங்கியுள்ள காபோவைதரேற்றின் அளவு
(1) 80 கிராம் (2) 100 கிராம் (3) 120 கிராம்
(4) 140 கிராம் (5) 160 கிராம்

**8.** ஒமேகா - 6 கொழுப்பு அமிலமானது
(1) லினோலெயிக் அமிலமாகும்.
(2) ஒலெயிக் அமிலமாகும்.
(3) ஸ்டியரிக் அமிலமாகும்.
(4) பாமிற்றிக் அமிலமாகும்.
(5) லினோலெனிக் அமிலமாகும்.

**9.** உடலினுள் அகத்துறிஞ்சப்படுவதற்கு கொழுப்பு தேவைப்படும் விற்றமின் சோடி
(1) நயசின், ரற்றினோல் என்பன ஆகும்.
(2) பயோட்டின், ரொக்கொபெரோல் என்பன ஆகும்.
(3) போலிக் அமிலம், பயோட்டின் என்பன ஆகும்.
(4) அசுக்கோபிக் அமிலம், நயசின் என்பன ஆகும்.
(5) கல்சிபெரோல், ரற்றினோல் என்பன ஆகும்.

**10.** பையுரேற்று பரிசோதனை மூலம் இனங்காணக்கூடிய போசணைக் கூறு
(1) மாப்பொருள் (2) குளுக்கோசு (3) செலுலோசு
(4) புரதம் (5) இலிப்பிட்டு

**11.** பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - எண்ணெய் அதிகமாகவுள்ள விதைகள் அத்தியாவசிய கொழுப்பமிலங்களை அதிகம் கொண்டவையாகும்.
B - பால் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகளில் விற்றமின்கள் $B_1$, $B_2$, C என்பன அடங்கியுள்ளன.
C - மீனுணவுகள் உடலுக்கு நாகத்தையும் அயடினையும் வழங்குகின்றன.
D - காய்கறிகள் ஒட்சியெதிரிகளையும் போலிக் அமிலத்தையும் வழங்கும் மூலமாகும்.

இவற்றுள் சரியானவை
(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம்
(3) B, D ஆகியன மாத்திரம் (4) A, B, C ஆகியன மாத்திரம்
(5) A, C, D ஆகியன மாத்திரம்

**12.** பெருங்குடல் மூலம் உற்பத்தியாக்கப்படும் இரண்டு வகை விற்றமின்களைக் குறிப்பிடும் விடை யாது?
(1) விற்றமின் D, விற்றமின் K (2) விற்றமின் K, பயோட்டின்
(3) விற்றமின் E, பயோட்டின் (4) விற்றமின் A, போலிக் அமிலம்
(5) விற்றமின் D, போலிக் அமிலம்

**13.** குறைபாட்டு நோயொன்றின், நோய் அறிகுறிகள் சில பின்வருமாறு
- நிர்ப்பீடனம் குறைவடைதல்
- தலைமுடி அதிகமாக உதிர்தல்
- தோல் சொரசொரப்பாதல்
- காயங்கள் குணமாதல் தாமதமாதல்
- உடல் வளர்ச்சி குன்றுதல்

மேலே கூறப்பட்டுள்ள நோய் அறிகுறிகள் தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் போசணைப்பொருள்
(1) விற்றமின் D (2) அயடின் (3) கல்சியம்
(4) நாகம் (5) விற்றமின் K

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

4514



**14.** உணவுக் கால்வாயில் கல்சியம் அகத்துறிஞ்சலை அதிகரிப்பதில் தாக்கம் செலுத்தும் காரணி யாது?
(1) விற்றமின் C அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உட்கொள்ளல்
(2) தேநீர், கோப்பியை அருந்துதல்
(3) தினந்தோறும் தவிட்டுடனான அரிசியை உணவில் சேர்த்தல்
(4) நார்ச்சத்து அடங்கிய உணவினை அதிகம் நுகர்தல்
(5) விற்றமின் D அடங்கியுள்ள உணவுகளை உட்கொள்ளல்

**15.** பின்வருவனவற்றுள் உயரத்திற்கேற்ற நிறையுடனான சுகதேகி ஒருவரின் உடற் திணிவுச் சுட்டி (BMI) எது?
(1) 18 (2) 22 (3) 26 (4) 29 (5) 32

**16.** குறையூட்ட நிலைகள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.
A - குறள்தன்மை (உயரம் குறைவு)
B - மரஸ்மஸ்
C - குவாசியாக்கோர்

இவற்றுள் உக்கிரமான குறையூட்ட நிலை / நிலைகள் என அழைக்கப்படுவது
(1) A மாத்திரம். (2) A, B ஆகியன மாத்திரம்.
(3) A, C ஆகியன மாத்திரம். (4) B, C ஆகியன மாத்திரம்.
(5) A, B, C ஆகிய அனைத்தும்.

**17.** போசாக்குமிக்க காலை உணவு வேளைக்கு மிகவும் பொருத்தமானது
(1) காய்கறிப் பேஸ்ரி, பால்
(2) பெட்டிஸ், பழச்சாறு
(3) மீன் பாண், குளிர்த்திய கோப்பியும்
(4) பணிஸ், கோப்பி
(5) முட்டை அப்பம், இலைக் கஞ்சி

**18.** உணவில் நுண்ணங்கிகள் வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு அகக் காரணிகள்
(1) pH பெறுமானம், போசணைப் பதார்த்தங்களின் அளவு
(2) ஈரலிப்பு, சாரீரப்பதன்
(3) ஒட்சியேற்ற / தாழ்த்தல் அழுத்தம், சாரீரப்பதன்
(4) போசணைப் பதார்த்தங்களின் அளவு, வளிமண்டல ஒட்சிசன்
(5) pH பெறுமானம், வளிமண்டல ஒட்சிசன்

**19.** உணவு நற்காப்பு பற்றிய உயர் வெப்பமுறை (UHT) என்றால் என்ன?
(1) உணவை 72°C வெப்பநிலையில் 15 செக்கன்கள் வைத்து 10°C வரை குளிர்த்துதல்.
(2) உணவை 63°C வெப்பநிலையில் 30 நிமிடங்கள் வைத்து 10°C வரை குளிர்த்துதல்.
(3) உணவை வெந்நீரில் (100°C யிலும் சிறிதளவு குறைந்த) சுமார் 2 நிமிடங்கள் அமிழ்த்தி வைத்தல்.
(4) பொதிசெய்யப்பட்ட உணவை 130 - 150°C வெப்பநிலையில் சில செக்கன்கள் வைத்தல்.
(5) உணவை 121°C வெப்பநிலையில் 15 psi அமுக்கத்தின்கீழ் 15 - 20 நிமிடங்கள் வைத்தல்.

**20.** சில நுண்ணங்கி இனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - இலற்றிக் அமில பற்றீரியா
B - அசெற்றிக் அமில பற்றீரியா
C - மதுசாரம் உற்பத்தி செய்யும் பற்றீரியா
D - சில பங்கசுக்கள்

இவற்றுள் உணவினை நொதிக்கச்செய்யப் பயன்படுத்தப்படுபவை
(1) A, B ஆகியன மாத்திரம்.
(2) B, C ஆகியன மாத்திரம்.
(3) A, B, C ஆகியன மாத்திரம்.
(4) A, B, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D ஆகிய அனைத்தும்

**21.** உணவு நஞ்சாதலால் ஏற்படும் நோய் நிலைமை யாது?
(1) சல்மோனெல்லோசிசு (2) வாந்திபேதி (3) கழிச்சல் நோய்
(4) தைபொயிட்டு (5) காசநோய்

[பக். 4 ஐப் பார்க்க

**22.** இரண்டு குழம்பாக்கிகள்
(1) சோடியம் நைத்திரைற்று, பொஸ்போலிப்பிட்டு
(2) ஈதயில் பியூற்றேற்று, மொனோசோடியம் குளுட்டமேற்று
(3) லெசிதீன், கிளைக்கோல்
(4) புரோபிலீன், சக்கரின்
(5) பொற்றாசியம் நைத்திரைற்று, எமைல் அசற்றேற்று

**23.** வகை 100 க்குரிய தையல்
(1) லொக் தையல் (2) கைத் தையல் (3) அலைநெளித் தையல்
(4) மறைப்புத் தையல் (5) ஓவர்லொக் தையல்

**24.** பின்வருவனவற்றுள் மீள்பிறப்பித்த நார்வகை எது?
(1) நைலோன் (2) ஓர்லோன் (3) கேசீன்
(4) டெர்லின் (5) பொலிஎதிலீன்

**25.** பின்வருவன செயற்கை நார் உற்பத்தியுடன் தொடர்பான சில கூற்றுகளாகும்.
A - இரசாயனப் பொருட்களின் தொழிற்பாட்டின் மூலம் இதற்கான பல்பகுதியங்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.
B - பல்பகுதியங்களை வெப்பமேற்றிப் பெறப்படும் கரைசலானது கரைசல் முறை நூற்றலுக்காகப் பயன்படுத்தப்படும்.
C - உலர்முறை நூற்றல், ஈரமுறை நூற்றல் என்பன உருக்கி நூற்றலின் இரண்டு வகைகளாகும்.
D - பல்பகுதியக் கரைசலை இரசாயனக் கரைசலில் விழச்செய்து நார்களைப் பெற்றுக்கொள்ளல் ஈரமுறை நூற்றலாகும்.

இவற்றுள் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A மாத்திரம். (2) C மாத்திரம். (3) A, D ஆகியன மாத்திரம்.
(4) B, C ஆகியன மாத்திரம். (5) B, D ஆகியன மாத்திரம்.

**26.** எரித்தல் முறையில் பல்வேறு நார் வகைகளை இனங்காணும்போது அவதானிக்கப்பட்ட சில பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் சரியான விடை எது?
(1) நைலோன் உருகி எரியும்.
(2) லினன் கரி போன்ற சாம்பலை மீதப்படுத்தும்.
(3) பட்டு இலகுவில் தீப்பற்றும்.
(4) செலுலோசு அசெற்றேற்று தூளாக்க முடியாத மணி போன்ற சாம்பலை மீதப்படுத்தும்.
(5) அக்கிரிலிக்கு பாரமற்ற சாம்பலை மீதமாக்கும்.

**27.** பின்வரும் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள பின்னலைப் பயன்படுத்தி வடிவமைக்கப்படக் கூடியவை எவை?



(1) ரீ சேட் (T shirt), காலமேசு (socks)
(2) காலமேசு, விளையாட்டு உடைகள்
(3) ரீ சேட், விளையாட்டு உடைகள்
(4) காலமேசு, நீச்சலுடைகள்
(5) நீச்சலுடைகள், ரீ சேட்

**28.** பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - பருத்தித் துணிகளை வெளிற்றுவதற்கு ஐதரசன் பேரொட்சைட்டு மிகவும் பொருத்தமானது.
B - துணியில் அச்சிடுவதற்கான அச்சுக்களைத் தயாரிப்பதற்கு மரக்கட்டை, உலோகம், லினோலியம் என்பன பயன்படுத்தப்படுகின்றன.
C - சுருங்காமற் செய்தல் (sanforizing) என்பது துணியைச் சலவை செய்யும்போது சுருக்கங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக நிகழ்த்தப்படும் ஒரு இரசாயனச் செயன்முறை ஆகும்.
D - கைக்குட்டை, துடைத்துண்டு ஆகியவற்றுக்கு சாதா நெசவின் ஒரு வகையான பாய் நெசவு பயன்படுத்தப்படுகிறது.

மேற்குறித்த விடயங்களுள் புடைவைத் தொழினுட்பத்துடன் தொடர்புடைய சரியான விடயங்கள்
(1) A, C ஆகியன மாத்திரம். (2) B, D ஆகியன மாத்திரம்.
(3) C, D ஆகியன மாத்திரம். (4) A, B, C ஆகியன மாத்திரம்.
(5) A, B, D ஆகியன மாத்திரம்.

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**29.** டெனிம் காற்சட்டைகளில் துவாரங்களாகக் கிழிந்த தன்மையை ஏற்படுத்துவதற்கு வழங்கப்படும் நேர்த்தியாக்கல்

(1) மணலிடல்
(2) அரத்தாளினால் தேய்த்தல்
(3) நொதியச் சலவை
(4) சௌகரியமாக்கற் பரிகரிப்பு
(5) பரமங்கனேற்று சிவிறல்

**30.** சிறிய உடல் தோற்றத்தைக் கொண்ட ஒருவர் அணிவதற்கு மிகவும் பொருத்தமானது

(1) வெள்ளைநிற ஆடைகளாகும்.
(2) கடும் நிறமுடைய ஆடைகளாகும்.
(3) தனி நிறமுடைய ஆடைகளாகும்.
(4) பெரிய அலங்காரத்துடனான ஆடைகளாகும்.
(5) கிடைக் கோடுகளுடனான ஆடைகளாகும்.

**31.** வினைத்திறனான தொடர்பாடல் பற்றிய சரியான கருத்தைத் தெரிவுசெய்க.

(1) வெற்றியைக் காண்பிப்பதற்கு பெருவிரலை நிமிர்த்திப் பிடித்தல்
(2) தொடர்பாடலின்போதான ஒருசீரின்மை பற்றிய விழிப்புணர்வு இருத்தல்
(3) மிக விரைவாக அறிவிக்கக்கூடிய தகவலொன்றை குறுந்தகவல் (sms) மூலமாக அனுப்புதல்
(4) நேர முகாமைத்துவத்துக்காக வேறு வேலையில் ஈடுபட்டவாறே உரையாடலில் ஈடுபடல்
(5) நிறுவனத்தின் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பினை அறிவித்தல் பலகையில் பிரசுரித்தல்

**32.** நேர்முகப் பரீட்சை ஒன்றின்போது கேட்கப்படும் சில வினாக்கள் பின்வருமாறு.

A - நீங்கள் திருமணம் ஆகாதவரா?
B - எமது நிறுவனத்திற்கு விண்ணப்பித்தமைக்கான காரணம் என்ன?
C - நீங்கள் மேலதிக நேர வேலையில் ஈடுபடுவதற்கு விரும்புகின்றீர்களா?
D - உங்களுடைய விசேட திறமைகள் என்ன?

இவற்றுள் திறந்த வகை வினா / வினாக்கள்

(1) B மாத்திரம்.
(2) D மாத்திரம்.
(3) A, C ஆகியன மாத்திரம்.
(4) A, D ஆகியன மாத்திரம்.
(5) B, D ஆகியன மாத்திரம்.

**33.** அறிகைசார், சமூக, பௌதிக செயற்பாடுகள் ஒழுங்குமுறையில் உள்ள விடையைத் தெரிவுசெய்க.

(1) புகைப்படக் கலை, சித்திரம் வரைதல், தசைப்பயிற்சி (gymnastics)
(2) கரம் விளையாட்டு, பின்னல் தையல், வீடியோ விளையாட்டுக்கள்
(3) சங்கீத உபகரணங்களை இசைத்தல், கிரிக்கெட் விளையாட்டு, யோகாசனம்
(4) உடற்பயிற்சி செய்தல், வீட்டுத்தோட்டம் செய்தல், சமைத்தல்
(5) தொலைக்காட்சி பார்த்தல், வாகனம் ஓட்டுதல், அங்காடிகளுக்குச் செல்லுதல்

**34.** சூழுநிலைச் சுற்றுப்பயணத்துடன் தொடர்புடைய சரியான விடை எது?

(1) தனிநபர், குடும்பங்கள், நண்பர்கள் அல்லது சிறு குழுக்கள் சுற்றுலாவில் ஈடுபடுதல்
(2) புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதில் ஈடுபடுதல்
(3) சமூகத்திற்கும் சூழலுக்கும் ஏற்படும் மறைவகையான தாக்கங்கள் குறைவாக இருத்தல்
(4) புகழ்பெற்ற சுற்றுலாத் தளங்கள்மீது அதிக நாட்டம் கொள்ளுதல்
(5) அறிவைப் பெறுவதற்கும் ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் முக்கியமாதல்

**35.** பின்வருவனவற்றுள் மனிதனால் ஆக்கப்பட்ட கவர்ச்சிக்கான உதாரணமாக **அமையாதது** எது?

(1) சமயம் சாரந்த சுற்றுப்பயணம்
(2) பண்பாட்டுச் சுற்றுப்பயணம்
(3) கடற்கரைச் சுற்றுப்பயணம்
(4) விவசாயச் சுற்றுப்பயணம்
(5) சூழல் சார்ந்த சுற்றுப்பயணம்

**36.** சுற்றுலாவின் மறைவகையான சமூகத் தாக்கமாக அமைவது

(1) தொழில் வாய்ப்புக்கள் குறைவடைதல் ஆகும்.
(2) சுற்றுலா ஒரு குறித்த பிரதேசத்திற்கு வரையறுக்கப்படுதல் ஆகும்.
(3) தாழ்வு மனப்பான்மை தொடர்பான உணர்வுகள் வளர்ச்சியடைதல் ஆகும்.
(4) சுற்றுலாப் பயணிகளின் வருகை ஒரு குறித்த காலப்பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டதாயிருத்தல் ஆகும்.
(5) நேர், நேரில் தொழில் வாய்ப்புக்கள் ஆகும்.

[பக். 6 ஐப் பார்க்க

**37.** பின்வரும் உபகரணங்களுள் மின் வினைத்திறன் அதிகரிக்கும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் விடையைத் தெரிவுசெய்க.
(1) இறு புளோரொளிர்வு மின்குமிழ் (CFL), தொலைக்காட்சி, நுண்ணலைக் கனலடுப்பு, மின்னழுத்தி
(2) இறு புளோரொளிர்வு மின்குமிழ், தொலைக்காட்சி, மின்னழுத்தி, நுண்ணலைக் கனலடுப்பு
(3) இறு புளோரொளிர்வு மின்குமிழ், நுண்ணலைக் கனலடுப்பு, தொலைக்காட்சி, மின்னழுத்தி
(4) தொலைக்காட்சி, இறு புளோரொளிர்வு மின்குமிழ், மின்னழுத்தி, நுண்ணலைக் கனலடுப்பு
(5) தொலைக்காட்சி, நுண்ணலைக் கனலடுப்பு, இறு புளோரொளிர்வு மின்குமிழ், மின்னழுத்தி

**38.** மின் சக்தியுடன் தொடர்புடைய சரியான கூற்று யாது?
(1) நேரோட்ட மின், ஆடலோட்ட மின் என்பன பிரதான மின் வழங்கல் மூலம் பெறப்படுகின்றன.
(2) ஒரு மின் வழங்கலின் அழுத்த வித்தியாசம் வோல்ற்றளவு என அழைக்கப்படும்.
(3) மின்னோட்டம் பாய்ந்து செல்வதில் காணப்படும் தடங்கல் அல்லது தடை அம்பியரில் அளக்கப்படும்.
(4) மின்னுபகரணமொன்று ஒரு நிமிடத்தில் செய்கின்ற வேலையின் அளவு அதன் வலு எனப்படும்.
(5) மின்னலகு என்பது ஒரு கிலோ வாற்று ஆகும்.

**39.** மின் சக்தியைப் பெற்றுக்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் மீளப் புதுப்பிக்கத்தக்க இரண்டு சக்தி முதல்கள்
(1) உயிர்த்திணிவு, நிலக்கரி (2) கடலலை, மின்கலம் (3) நிலக்கரி, காற்று
(4) காற்று, கடலலை (5) உயிர்த்திணிவு, மின்கலம்

**40.** வீட்டு நீர் வழங்கல், நுகர்வு என்பவற்றுடன் தொடர்புடைய சில கூற்றுகள் பின்வருமாறு.
A - குடிநீரில் மனித அல்லது விலங்கு மலங்கள் அடங்கவில்லை.
B - நீர்த் தொட்டிக்கு நீரை வழங்கும் குழாய் கீழ்ப் புறத்தின் வழியேயும் வீட்டுக்கு நீரை வழங்கும் குழாய் மேற் புறத்தின் வழியேயும் தொட்டியோடு இணைக்கப்பட்டிருக்கும்.
C - குளிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட நீரில் தொழிற்படு நிலையிலுள்ள பற்றீரியாக்கள் அதிக அளவில் காணப்படும்.
D - சமயலறைக் கழிவு நீரை நேராக அழுகற் தொட்டிக்கு அனுப்புதல் பொருத்தமற்றதாகும்.
இவற்றுள் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A மாத்திரம். (2) B மாத்திரம். (3) D மாத்திரம்.
(4) A, C ஆகியன மாத்திரம். (5) B, D ஆகியன மாத்திரம்.

**41.** உணவு தயாரிக்கும்போது அதிகளவு வாயுக்களை வெளியேற்றும் உணவுப் பொருள்
(1) கடலுணவுகள் (2) தானியங்கள் (3) மாட்டிறைச்சி
(4) மிருகங்களின் பால் (5) பூசு எண்ணெய் (oil spread)

**42.** பின்வருவனவற்றுள் பிரிபயோட்டிக்குக் கூறுகளுக்கு வாழிடமும் போசணையும் வழங்காத உணவுவகை எது?
(1) உருளைக்கிழங்கு (2) வெள்ளைப் பூடு (3) வாழைப்பழம்
(4) லீக்ஸ் (5) போஞ்சி

**43.** சேதன விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பொருள்
(1) பரம்பரையலகு திரிவுபடுத்தப்பட்ட அங்கிகள்
(2) நுண்ணுயிர் எதிர்ப்பிகள்
(3) பசளைகள்
(4) உயிரியல் பீடைநாசினிகள்
(5) வளர்ச்சி ஓமோன்கள்

**44.** கழிவுப்பொருட்கள் முகாமைத்துவத்தின் போதான படிமுறைகள் ஒழுங்குமுறையில் அமைந்த விடையைத் தெரிவுசெய்க.
(1) வேறாக்கல், வெளியேற்றல், களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல்
(2) வேறாக்கல், பதப்படுத்தல், வெளியேற்றல், களஞ்சியப்படுத்தல்,
(3) வேறாக்கல், கொண்டு செல்லல், களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல்
(4) பதப்படுத்தல், வேறாக்கல், களஞ்சியப்படுத்தல், கொண்டு செல்லல்
(5) பதப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், வேறாக்கல், கொண்டு செல்லல்

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



45. பின்வருவனவற்றுள் ஜீன் பியாஜேயின் கருத்திற்கமைய கட்டிளமைப் பருவமாகக் கருதப்படும் வயதுப் பிரிவு எது?
(1) 10 - 16 இற்கு இடைப்பட்ட வயது
(2) 10 - 19 இற்கு இடைப்பட்ட வயது
(3) 10 - 20 இற்கு இடைப்பட்ட வயது
(4) 11 - 20 இற்கு இடைப்பட்ட வயது
(5) 13 - 18 இற்கு இடைப்பட்ட வயது

46. பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - இளமைப் பருவத்தில் ஆண் பிள்ளைகளின் நிறை அதிகரிப்பதற்குப் பிரதான காரணம் கொழுப்பிழையங்களில் நிகழும் விரைவான வளர்ச்சியாகும்.
B - கட்டிளமைப் பருவத்தினரின் நுண்ணறிவு விருத்தியின்போது தூல சிந்தனையிலிருந்து நியம சிந்தனைக்கு மாறுதல் இடம்பெறும்.
C - இளமைப் பருவத்தில் ஆண் பிள்ளைகளின் பூப்பெய்தல் 10 - 13 இற்கு இடைப்பட்ட வயதில் நிகழும்.
மேற்குறித்த கூற்றுகளுள் சரியானது / சரியானவை
(1) A மாத்திரம். (2) B மாத்திரம். (3) C மாத்திரம்.
(4) A, B ஆகியன மாத்திரம். (5) B, C ஆகியன மாத்திரம்.

47. பின்வரும் ஆளுமை பற்றிய கூற்றுகளில் **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) ஆளுமையின்மீது சூழலைவிட பரம்பரையலகுத் தாக்கம் அதிகமாகும்.
(2) சமநிலையான ஆளுமையால் ஒருவரின் தனியாள் பண்புகளை விருத்தி செய்ய இயலும்.
(3) ஆளுமை ஒருவரின் தனித்தன்மையை வெளிப்படுத்தும்.
(4) சிறந்த ஆளுமை சமூக மதிப்பிடலின் மூலம் தீர்மானிக்கப்படும்.
(5) ஆளுமையினுள் உள, பௌதீகக் குணவியல்புகளும் உள்ளடங்கும்.

48. உள அழுத்தத்தினால் அவதியுறும் ஒருவர் வெளிப்படுத்தும் ஒரு அறிதலாட்சிசார் இயல்பையும் மனவெழுச்சி இயல்பையும் முறையே குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.
(1) திடுக்கிடல், பெருமூச்சு விடுதல்
(2) அதிக உணர்ச்சி வசப்படுதல், குழப்பமடைதல்
(3) சுறுசுறுப்பின்மை, திடுக்கிடல்
(4) பெருமூச்சு விடுதல், அதிக உணர்ச்சி வசப்படுதல்
(5) குழப்பமடைதல், சுறுசுறுப்பின்மை

49. கைசன் எண்ணக்கருவின் அடிப்படையானது
(1) நியமப்படுத்தல் ஆகும்.
(2) நல்ல வகையில் மேம்படுத்தல் ஆகும்.
(3) ஒழுங்குபடுத்தலும் நெறிப்படுத்தலும் ஆகும்.
(4) பயிற்சியும் போதனையும் ஆகும்.
(5) கிரயத்தை அதிகரித்தல் ஆகும்.

50. வணிகமொன்றை மேற்கொள்ளும்போது உள்வாரியான ஒழுக்கங்களாகக் கருதப்படும் இரு பண்புகள்
(1) நுகர்வோரின் தேவையை நிறைவேற்றுதல், நியாய விலைக் கொள்கை.
(2) வியாபார சட்டங்களைப் பின்பற்றுதல், உற்பத்தி செய்ய வேண்டிய ஒழுங்குமுறை.
(3) நியாய விலைக் கொள்கை, வியாபார சட்டங்களைப் பின்பற்றுதல்.
(4) உற்பத்தி செய்ய வேண்டிய ஒழுங்குமுறை, நுகர்வோரின் தேவையை நிறைவேற்றுதல்.
(5) உற்பத்தி செய்ய வேண்டிய ஒழுங்குமுறை, நியாய விலைக் கொள்கை.

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

ගෘහ ආර්ථික විද්‍යාව II
மனைப் பொருளியல் II
Home Economics II

28 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ **முதலாம்** வினா உட்பட **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்குக.

**1.** (i) வடிவமைப்பின் அடிப்படை அம்சமான 'இழையமைப்பை' அறிமுகம் செய்க.

(ii) குளிர்சாதனப் பெட்டியின் பாவனையின்போது மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய **இரு** விடயங்களை எழுதுக.

(iii) புரதம் மிகை நிரப்புதலை அறிமுகம் செய்க.

(iv) அல்லூட்ட நிலைமைகளின் பெயர்களைத் தருக.

(v) மனிதனால் உற்பத்தி செய்யப்படுகின்ற விசேட நார் வகைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(vi) ஆடைக் கைத்தொழிலுடன் இணைந்த **இரண்டு** கைத்தொழில்களை எழுதுக.

(vii) 'வீரதீரச் செயற் சுற்றுப்பயணம்' என்பதால் கருதப்படுவது யாது?

(viii) 'பச்சைவீட்டு விளைவு' என்பதை அறிமுகம் செய்க.

(ix) எழுத்துமூல தொடர்பாடலின் பிரதிகூலங்கள் **இரண்டினை** எழுதுக.

(x) குறைந்தளவு (எதிர்மறை) சுய எண்ணக்கருவை உடைய பிள்ளை ஒருவரிடம் வெளிப்படும் **இரண்டு** பண்புகளைக் குறிப்பிடுக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** (i) சிறப்பான வாழ்க்கைச் சூழல் என்பதால் கருதப்படுவது யாது? (03 புள்ளிகள்)

(ii) அலங்காரக் கோட்பாடுகளில் ஒன்றான 'உறுத்தல்' என்பதனை அறிமுகம் செய்க. (03 புள்ளிகள்)

(iii) உள்ளகவெளி நிர்மாணிப்பில் சுவர், நிலம் என்பவற்றின் நிர்மாணத்தின்போது கவனத்திற்கொள்ள வேண்டிய **இரண்டு** விடயங்கள் வீதம் விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) வீட்டு மின் பாவனையின்போது கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு முன்னேற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடுக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

**3.** (i) சமிபாட்டின்போது முக்கியத்துவம் பெறும் கொழுப்பு குழம்பாக்கலை அறிமுகம் செய்க. (02 புள்ளிகள்)

(ii) இரைப்பை அழற்சியினால் அவதியுறும் ஒருவருக்கு வழங்கக்கூடிய போசாக்கு சம்பந்தமான **மூன்று** ஆலோசனைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) இரும்புச்சத்துக் குறைபாடு இலங்கையில் பெரும்பாலும் காணப்படும் போசாக்குப் பிரச்சனையாகும். இந் நிலைமையைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய வழிமுறைகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இதய நோயினால் துன்புறும் நோயாளி ஒருவருக்கான ஒரு நாளுக்கான உணவுப் பட்டியலைத் தயார்செய்க. (06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

**4.** (i) 'உணவு நற்பாதுகாப்பு முக்கியமானதாகும்'. இதற்கான **மூன்று** காரணங்களைக் குறிப்பிடுக.(03 புள்ளிகள்)

(ii) உணவுப் பொதியொன்றினுள் இருக்க வேண்டிய **நான்கு** பண்புகளை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) உணவை நீரில் வெளிறச் செய்தலை (blanching) அறிமுகம் செய்து அது நடைபெறும் **இரண்டு** முறைகளை முன்வைக்க. (04 புள்ளிகள்)

(iv) உணவின் தரத்தை அதிகரிப்பதற்குத் தொழினுட்ப முறைகளைப் பயன்படுத்தும் விதத்தினை உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

**5.** (i) மேசை விரிப்பொன்றைத் தைக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய பிரதான விடயங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) தைத்த ஆடைகளுக்கான புடைவைகளைத் தெரிவுசெய்யும்போது மேற்கொள்ளப்படும் 'தரப் பரிசோதனை' என்பதால் கருதப்படுவது யாது? (03 புள்ளிகள்)

(iii) புடைவைகளின் 'முற் பரிகரிப்பு' செயன்முறையை விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) இரண்டு வர்ணங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பத்திக் முறை அச்சிடலை விளக்குக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

**6.** (i) பசுமை நுகர்வாளன் என்ற வகையில் உங்களது வீட்டுத்தோட்டத்தை ஒழுங்குபடுத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய **மூன்று** படிமுறைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) சேதன விவசாயத்தின் முக்கியத்துவத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) இயற்கையான, மனிதனால் கட்டுப்படுத்தப்பட்ட சுற்றுலாக் கவர்ச்சிகளை அறிமுகஞ் செய்து, அவை ஒவ்வொன்றிற்கும் **இரண்டு** உதாரணங்கள் வீதம் எழுதுக. (04 புள்ளிகள்)

(iv) சுற்றுலாவின் மூலம் இலங்கைக்குக் கிடைக்கும் அனுகூலங்களைக் கலந்துரையாடுக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

**7.** (i) 'துணைப் பாலியல்புகள்' என்பதை அறிமுகம் செய்க. (03 புள்ளிகள்)

(ii) 'உயிரியல் செயன்முறைகளில் ஏற்படும் மாற்றம் தனிநபர் ஆளுமையின்மீது தாக்கம் செலுத்தும்'. இந் நிலைமையை வெளிப்படுத்தும் **நான்கு** பண்புகளை முன்வைக்குக. (04 புள்ளிகள்)

(iii) கட்டிளமைப் பருவத்தினரின் ஆளுமை விருத்தியில் சமூகத்தின் வகிபாகத்தைக் கலந்துரையாடுக. (04 புள்ளிகள்)

(iv) 'சமூக வலைத்தளங்கள் கட்டிளமைப் பருவத்தினர் மீது நேர்மறையானதும் எதிர்மறையானதுமான செல்வாக்கைச் செலுத்தும்'. இக்கூற்றினைக் கலந்துரையாடுக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

**8.** பின்வரும் தலைப்புகளில் **நான்கிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) கட்டிட வடிவமைப்பின்போது கவனத்திற் கொள்ளவேண்டிய 'பெறுமானத் தொகுதி'

(ii) உணவு சமைக்கும் ஒரு முறையான 'பொரித்தல்'

(iii) புடைவைகளை மினுக்குதல்

(iv) சுற்றுலாத்துறையின் மேம்பாட்டிற்கு எடுக்கக் கூடிய படிமுறைகள்

(v) கட்டிளமைப் பருவத்தினர் முகங் கொடுக்கும் குடும்பம் சார்ந்த பிரச்சினைகள்

(04 × 4 = 16 புள்ளிகள்)

* * *


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

LOL Book Store

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

# 25% OFF ALL BOOKS

**Including Exercise Books, CR Books, and B5 Books**




**ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්**

**ORDER BOOKS FROM LOL BOOKS STORE**

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP - 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!